செ.வெ.எண்-44 நாள்-24.03.2018

# அரியலூரில் அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.2 கோடியே 52 இலட்சத்து 56 ஆயிரத்து 248 மதிப்பில் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மருத்துவ உபகரணங்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வழங்கி, பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கி மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்தாவது** :-

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் விதி எண்.110-ன்கீழ் மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

அதன் வழியல், மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனமும், அரியலூர் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து அரியலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு 36000 சதுரஅடி பரப்பளவு கொண்ட புதிய கட்டிடம், நவீன சலவையகம், காத்திருப்போர் அறை மற்றும் உள் மற்றும் வெளி நோயாளிகள் பிரிவுகள் அமைக்கப்படவும், ஆய்வகம் புதுப்பிக்கப்பட்டு, மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்கள் வழங்கவும் ரூ.9 கோடியே 50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதில், இன்று (24.03.2018) மக்கள் நல்வாழ்வு துறை சார்பில், சாம்சங் நிறுவுனத்தின் சார்பிலும் சமூக பங்களிப்பு திட்டத்தின்கீழ் ரூ.80 இலட்சம் மதிப்பில் Ultra Sound Scanner கருவியினையும், ரூ.1 கோடியே 20 இலட்சம் மதிப்பில் உயர் தொழில்நுட்ப எக்ரே கருவியினையும் (Digital Portable X Ray Machine), ரூ.8 இலட்சத்து 14 ஆயிரத்து 50 மதிப்பில் அறுவை அரங்கத்திற்கு தேவையான உபகரணக் கருவகளும், ரூ.26 இலட்சத்து 42 ஆயிரத்து 198 மதிப்பில் நுண்கிருமி அழிப்பு சேவை பிரிவையும், ரூ.18 இலட்சம் மதிப்பிலான கட்டிடத்தினை என ஆகமொத்தம் **ரூ.2 கோடியே 52 இலட்சத்து 56 ஆயிரத்து 248** மதிப்பில் புதிய கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, சுகாதாரத்துறையின் சார்பில் அரசு மருத்துவமனைகளில் உயர்தரமான உயர் தொழில்நுட்பம் கொண்ட மருத்துவ கருவிகள் வழங்கியுள்ளது என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், சமூக பங்களிப்பு திட்டத்தின்கீழ் ரூ.5 கோடி மதிப்பில் மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் பணியினை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, நகராட்சி ஆணையர் ஆர்.வினோத், துணை இயக்குநர் பொது சுகாதாரம் ஹேமசந்த்காந்தி, தலைமை மருத்துவர் ரமேஷ், மருத்துவர்கள் கண்மணி, கொளஞ்சிநாதன், முகமது ரியாஸ், மாலதி மற்றும் செவிலியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**